பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 08 செவ்வாய்க்கிழமை 24.08.2021 கதிர் 292

### இனி இது ரகசியம் அல்ல!

கொவிட் தொற்றுப் பரவல், அதற்கான முழு முடக்கம் ஆகியவற்றுக்கு மத்தியலும், பௌத்த, சிங்கள மக்களின் பாரம்பரிய நிகழ்வான கண்டி தலதா பெரஹரா நேற்றுமுன்தினம் இரவு பாரம்பரிய பௌத்த, சிங்கள முறைப்படி நடந்

பக்கம்02

## சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி கொரோனா தொற்றால் காலமானார்

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா தனது 63 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்று மாலை உயிரிழந்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரி யாராவார்.

இவர் இலங்கையில்

2



## கௌரி சங்கரியின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு

### சுமந்திரன் எம்.பி. அனுதாபம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாரான சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் மறைவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி மிகவும் அபாயகரமான வழக்குகளில்கூட அதனைத் தனது பெயரிலேயே துணிந்து தாக்கல் செய்து

2

# ஊடகவியலாளர்கள் கைதுகள், விசாரணைகள் குறித்து இலங்கை ஊடக அமைப்புக்கள் கவலை

## பாதுகாப்புக்கு உத்தரவாதம் கோரி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

கொழும்பு, ஓகஸ்ட் 24

இலங்கையில் ஊடகவியலாளர்களைக் கைது செய்தல் மற்றும் விசாரணைக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள ஊடகவிய லாளர்களைப் பரிந்துரைக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு அமைய விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவர்களது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு, பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

2

## ஒரே நாளில் 4,353 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

இலங்கையில் நாளாந்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை உச்சமடைந்து வருகின்றது. நேற்று 4 ஆயிரத்து 353 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவே நாளொன்றில் இது வரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும்.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்தஎண்ணிக்கை 3 இலட்சத்து 94 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 222 பேர் குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின்

2

## மேலும் 194 பேர் சாவு மொத்தக் காவு 7,560

இலங்கையில் மேலும் 194 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்தவர்களில் 103 பெண்களும், 91 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதில் 20 ஆண்கள், 29 பெண்கள் என 49 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 145 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 71 ஆண்களும், 74 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா

2

### வடக்கு மாகாணத்தில் இம்முறை

## 94,475 குடும்பங்களுக்கே 2,000 ரூபா கொடுப்பனவு

(ந.லோகதயாளன்)

அரசால் அறிவிக்கப்பட்ட 2 ஆயிரம் ரூபா இடர்காலக் கொடுப்பனவை இம்முறை 94 ஆயிரத்து 475 குடும்பங்கள் மாத்திரமே வடக்கு மாகாணத்தில் பெற்றுக் கொள்ளத் தகுதியுடையன என்று மாவட்ட செயலகங்கள் பரிந்துரைத்துள்ளன.

கடந்த காலத்தில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி உள்ளிட்ட கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களும் தகுதியுடையன எனக் கணிக்கப்பட்டதால் வடக்கு மாகாணத்தில் முதலாவது தடவை 2 இலட்சத்து 82

10

## யாழில் 102 பேருக்கு நேற்று கொரோனா

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 102 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 144 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 737 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம்

2

## குடாநாட்டில் மேலும் மூவரை காவுகொண்டது கொரோனா

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 24

யாழ்ப்பாணத்தில் மேலும் 3 பேர் கொரோனாத் தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 83 வயதுடைய பெண் ஒருவரும், யாழ்ப்பாணம் - ஓட்டுமடத்தைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவரும், யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியைச் சேர்ந்த இஸ்லாமிய ஆண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 203 ஆக உயர்வடைந்துள்ளது.

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அயராது செயற்பட்டவர் கௌரி சங்கரி

### இரங்கல் செய்தியில் அரசியல் கைதிகளின் பெற்றோர் தெரிவிப்பு

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் வகைதொகையின்றி கைதுசெய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்படுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காக மிக நீண்ட காலமாகச் செயற்பட்டு வந்திருந்த சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளோம்.

- இவ்வாறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும்

2

## வைத்தியசாலைக்குச் சென்றவர் திடீரெனக் கீழே விழுந்து மரணம்

### அன்டிஜன் பரிசோதனையில் கொரோனா உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு காய்ச்சல் எனச் சென்ற நபர் வைத்தியசாலையில் தனது பெயர் விவரங்களைப் பதிந்து கொண்டு இருந்த போதே திடீரென விழுந்து மரணமடைந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

காய்ச்சல் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை அருகில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு மருந்து எடுப்பதற்காக நபர்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேறியதாக அறிவிக்கப்பட்டது.

பொது முடக்கம் காரணமாக மக்கள் பிரசன்னமின்றி இது நடத்தி முடிக்கப்பட்டது.

கண்டி தலதா மாளிகையில் உள்ள புனித தந்தம் 'தேசத்தின் மகுடம்' என்று குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்த பெரஹராவை ஒட்டி அங்கு பிரசன்னமாகியிருந்து, பாரம்பரிய முறைப்படி புனித தந்தத்துக்கும், புத்த பெருமானுக்கும் கொடுக்கும் சம்பிரதாய பூர்வ மதிப்பு, மரியாதை வழங்கப்பட்டிருப்பதாக திருப்தி தெரிவித்தார்.

எனினும், அந்நிகழ்வை ஒட்டி சில அபசகுனங்கள் குறித்தும் சிங்கள ஏடுகள் சில தகவல் வெளியிட்டிருக்கின்றன.

கதிர்காம தேவாலயத்தின் பிரதான கலசத்தை தாங்கிய முக்கிய யானை அச்சமயத்தில் தறிகெட்டு ஓடியது. அந்தப் பெஹராவில் செல்வதற்குத் தயார் செய்யப்பட்ட யானைகளில் குறைந்தது ஐந்து யானைகள் கடைசி நேரத்தில் காட்டுத்தனமாக குழப்படி செய்தன என்றும் கூறப்படுகின்றது. இதனால் பெரஹரா தொடங்குவது சற்றுத் தாமதமானது.

இந்தச் சமயத்தில் இருவர் காயமுற்றனர். எனினும் அவை மோசமான காயங்கள் அல்ல.

எனினும், பிரதான கலசத்தைத் தாங்கிய யானையும், வேறு ஐந்து யானைகளும் பெரஹரா ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் – ஒரே நேரத்தில் – குழப்பம் விளைவித்தமை பெரும் அபசகுனம் என தெற்கில் சில தரப்புகள் பேசிக் கொண்டன என அறியவந்தது.

* * *

அமைச்சர்கள் தமது ஓகஸ்ட் மாதச் சம்பளத்தை கொவிட் – 19 தடுப்புப் பணிக்குக் கையளிக்க வேண்டும் என நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனையை அமைச்சரவை ஏகமனதாக அங்கீகரித்ததாகக் கூறப்படுகின்றது.

'நல்லது. சம்பளத்தை அன்பளிப்புச் செய்பவர்கள் கிம்பளத்தையும் கொடுப்பார்களா?' – என்று கேள்வி எழுப்புகின்றார் தென்னிலங்கையின் விடயம் விளங்கிய ஊடகவிலாளர் ஒருவர். நல்ல கேள்விதான். போங்கள்...!

* * *

நாட்டில் இப்போதைய பொது முடக்கம் வருவதற்கு முன்னர் அத்தகைய பொது முடக்கத்தைக் கோரி கடந்த வியாழனன்று அரசுக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பத்துக் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் மொட்டுக் கூட்டுக்குள் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உட்பட பத்துக்கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு இக்கடிதத்தை அனுப்பியமை அரசுக்கு எதிரான சதி என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் (மொட்டுக் கட்சியின்) பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

ஓர் அமைச்சர் வெளிநாட்டு ஆதரவுடன் ஓர் அரசு மாற்றத்துக்கும் சதித் திட்டக் காய் நகர்த்தலை மேற்கொண்டுள்ளார் என்றும் அவர் குற்றம் சுமத்தியிருக்கின்றார். பகிரங்க ஊடக மாநாட்டில் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

முடக்க விவகாரம் மொட்டுக் கூட்டணியை முடக்கி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைப்போலும்...!

– மின்னல் –

## யாழில் 102...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய யாழ். மாவட்டத்தில் 102 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 27 பேருக்கும், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் 05 பேருக்கும், கிளிநொச்சி – இரணைமடு விமானப்படை முகாமில் 07 பேருக்கும், மன்னார் கடற்படை முகாமில் 02 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஊடக தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், இலங்கை இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் ஆகியன இணைந்து இந்தக் கோரிக்கை கடிதத்தை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

லங்கா ஈ நியூஸ் செய்தி வலைத்தளத்தில் ஊடகவியலாளராகக் கடமை புரியும் கீர்த்தி ரத்நாயக என்பவர் இந்தியத் தூதுவராலயத்துக்குச் சில தகவல்களைப் பெற்றுக்கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் அவரை 90 நாள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று லங்கா ஈ நியூஸ் செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் குழு எமக்கு அறியத்தந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஊடகவியலாளரைப் பரிந்துரைக்கப்பட்ட சட்ட விதிகளுக்கு அமைய விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவரது உயிருக்குப் பாதுகாப்பு அளிக்குமாறும் ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பாகிய நாம் முதலில் உங்களை வேண்டிக்கொள்கின்றோம்.

அவர் கைது செய்யப்பட்ட குற்றச்சாட்டு தவிர்ந்த அவர் கடமை புரியும் செய்தி இணையத்தளத்தின் தகவல்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை செய்து வருவதுடன், மேலும் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் 'லங்கா ஈ நியூஸ்' ஆசிரியர் குழு குறிப்பிடுகின்றது.

நீதித்துறை செயற்பாட்டில் ஏதேனும் ஒரு சம்பவம் தொடர்பில் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆதாரங்களைத் தவிர அவரிடம் காணப்படும் மற்ற மூலாதாரங்களை வெளிப்படுத்தாது அதன் இரகசியத்தன்மையைப் பேணுவதானது ஊடகவியலாளர்களின் பணிசார் பொறுப்பு மற்றும் ஊடகவியல் மரபு என்பதனை இந்தத் தருணத்தில் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஆகவே, கீர்த்தி ரத்நாயக சம்பவம் தொடர்பான அனைத்து உண்மை தகவல்களையும் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், சட்ட ஏற்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

இதேபோல் கடந்த சில நாள்களுக்கு முன்னர் சமூக வலைத்தள ஆர்வலரான துரார வன்னியாராச்சி என்பவரின் வீட்டை அதிகாலை வேளையில் பெருமளவான பொலிஸ் அதிகாரிகள் கொண்ட குழு சோதனை நடத்தியதாகக் கூறப்படுகின்றமை, தமிழன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா தங்கியிருந்த வீட்டுக்குள் சி.ஐ.டி. எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் நுழைய முற்பட்டமை, அதேபோன்று மட்டக்களப்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் விசாரிக்கப்பட்டமை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

மேலே குறிப்பிட்ட சமீபத்திய சம்பவங்களின் பின்னணி தெளிவாக இல்லை என்பதால் இந்தச் சம்பவங்கள் தொடர்பான தெளிவான தகவல்களை சமூகத்துக்குத் தெரியப்படுத்துவது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

ஊடகவியலாளர்களைப் பயமுறுத்தும் விதத்தில் செயல்படுவதானது அவர்களின் ஊடக சுதந்திரத்தைத் தடுப்பதுடன் மேலும் அவர்களின் ஊடகப் பணி நடவடிக்கைகளின் செயற்றிறனைப் பாதிக்க வழிவகுக்கும் என்பதால் பரிந்துரைக்கப்பட்ட சட்ட ஏற்பாட்டு விதிகளுக்குள் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப்படுத்துமாறும், ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படும் தருணங்களில் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை சமூகமயமாக்குமாறும் ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு என்ற வகையில் உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

## கௌரி சங்கரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வாதாடியவர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரும் கொழும்புக் கிளையின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவின் பாரியாரின் துயரில் தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக நாமும் பங்குகொள்கின்றோம்.

அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சட்டத்துறையில் நீண்டகாலம் துணிச்சலுடன் செயலாற்றிய சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரியின் திடீர் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று சுமந்திரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் கைதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இவர் ஆரம்ப காலங்களில் தமிழ் அரசியல் கைதிகளான குட்டிமணி, தங்கத்துரை போன்ற முக்கியமானவர்களின் வழக்கு விவகாரங்களில், ஆட்சியாளர்களால் விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்களையும் மீறி துணிவோடு நீதிமன்றப்படி ஏறி வழக்காடிய ஜனாதிபதி சட்டத்தரணி கே.ரி.தவராசாவுக்கு எப்போதும் பக்க பலமாக நின்று சட்ட ஆலோசனைகள் உட்பட பல்வேறு வழிவகைகளிலும் உதவி வந்திருக்கின்றார்.

உயர்நீதிமன்றில் அரசமைப்பு தொடர்பான மிக முக்கிய வழக்குகளை முன்னின்று நெறிப்படுத்தியதன் ஊடாக தனது சட்டப்புலமையையும் வாதத்திறமையையும் இவர் பறைசாற்றி வந்திருந்தார்.

பிரதானமாக குடிமக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்கு விடயங்களில் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். மனித கடத்தல்கள், திட்டமிடப்பட்ட அரசியல் படுகொலைகள் போன்ற வழக்குகளுக்காக உயர்நீதிமன்றில் சட்டத்தரணிகள் குழுவோடு நின்று, அவற்றை நெறிப்படுத்தியதன் மூலம் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியில் பேசப்பட்ட பிரபல சட்டத்தரணி ஆவார்.

இவர் பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சட்ட ஆலோசகராகப் பல பணிகளை ஆற்றியுள்ளமையுடன், நாட்டில் சட்டத்தின் ஆட்சியையும் ஜனநாயகத்தின் உயிர்ப்பையும் தக்க வைப்பதில் தனது சட்டத்துறை மூலம் முக்கிய வகிபாகத்தை செய்து வந்திருக்கின்றார்.

மேலும், குடியியல் வழக்குகள், பெண்களுக்கு எதிரான அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்பான வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையாகி நியாயத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஒருபோது பின்னின்றவரல்லர். இவரின் திடீர் இழப்பு எமக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அன்னாரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் – என்றுள்ளது.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 381 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மேலும் 194 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சாவுகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வைத்தியசாலைக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஒருவர் சென்றுள்ளார். அவரது உடல் நிலையை அவதானித்த தனியார் மருத்துமனையைச் சேர்ந்தவர்கள் குறித்த நபரை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர். இதையடுத்து குறித்த நபர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்று அங்கு சிகிச்சை பெறுவதற்காகத் தனது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொண்டிருந்தபோதே திடீரெனக் கீழே விழுந்து மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவர் வவுனியா – உக்குளாங்குளம் பகுதியைச் சேர்ந்த 55 வயது நபராவார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## சிரேஷ்ட சட்டத்தரணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான பல வழக்குகளில் முன்னிலையாகி அவர்களின் விடுதலைக்காக வாதிட்டு வந்தார்.

அத்தோடு, நாட்டின் முக்கியமான வழக்குகளிலும், சர்வதேச அளவில் பேசப்படும் வழக்குகளிலும் இவர் முன்னிலையாகி யிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் –
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் –
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

# அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு மலையகக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்

## இராதாகிருஷ்ணன் வலியுறுத்து



வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பது போல் மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்–

இன்று வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு விடயங்களுக்கு எதிராக அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து இருப்பது வரவேற்கக் கூடிய விடயமாகும்.

அதேபோல மலையகத்திலும் இன்று எங்களுடைய மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக சம்பள உயர்வு பிரச்சினை, தடுப்பூசிகள்பெற்றுக்கொள்வதில்ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள், அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற சலுகைகள் கிடைக்காத சூழ்நிலை, தடுப்பூசி தொடர்பாக சரியான விழிப்புணர்வு இல்லாத நிலைமை என பல்வேறு பிரச்சினைகளை எமது மக்கள் சந்தித்து வருகின்றார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொடுக்க வேண்டுமாக இருந்தால் மலையகத்தில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம் மாத்திரமே அரசாங்கத்திற்கான ஒரு பாரிய அழுத்தத்தைக் கொடுக்க முடியும். மலையகக் கட்சிகள் தனித்து நின்று செயற்படுவதால் எதனையும் சாதிக்க முடியாது.

அனைவருடனும் இணைந்து செயல்படுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்கான முன்னெடுப்புகளை உரியவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இன்று கொரோனாத் தொற்று மிக வேகமாக பரவி வருகின்ற இந்த சூழ்நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் நிலையங்கள் பல மைல்களுக்கு அப்பால் அமைக்கப்பட்டு இருக்கின்றமையால் எங்களுடைய மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே ஏனைய மாவட்டங்களைப் போல மலையகப் பகுதிகளில் இருக்கின்ற பாடசாலைகள், ஆலய மண்டபங்கள், சனசமூக நிலையங்கள் இவற்றை தனிமைப்படுத்தல்நிலையங்களாகசெயற்படுத்த முடியுமாக இருந்தால் சிரமங்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

அரசாங்கம் 2,000 ரூபா வழங்குவதற் கான ஏற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற இந்த சூழ்நிலையில், அந்தத் தொகை மலையகத்திலே கடந்த காலங்களில் கட்சி ரீதியாக வழங்கப்பட்டதை போல்அல்லாமல்உரியவர்களுக்குச்சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் சரியானவர்களை இணங்கண்டு அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று அரசாங்கம் தன்னுடைய இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக அரசாங்கத்துக்குள் சிக்கல்கள் இருக்கின்றமை போல ஒரு நாடகத்தை அரங்கேற்றி மக்களின்உண்மையானபிரச்சினைகளை மழுங்கடிக்கச் செய்வதற்கு முயற்சி செய்கின்றது.

எனவே அந்தச் செயற்பாட்டைத் தவிர்த்து மக்களின் பிரச்சினைகளை இணங்கண்டு அதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

இலங்கை நாட்டுக்கு எப்போதெல்லாம் பிரச்சினைகள் ஏற்படுகின்றனவோ, அனர்த்தங்கள் ஏற்படுகின்றனவோ, அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்திய அரசாங்கம் தன்னுடைய உதவிக் கரத்தை நீட்டி இருக்கின்றது. இந்தக் கொரோனாத் தொற்று ஆரம்பித்த காலத்தில் எங்களுக்குத் தேவையான ஒரு தொகை தடுப்பூசிகளை இலவசமாக வழங்கி வைத்ததோடு, இன்னும் பல்வேறு உதவிகளை செய்தது.

இன்று ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள இந்த நிலையில் இந்திய அரசாங்கத்தின் கப்பல் மூலமாக 100 தொன் ஒட்சிசன் அனுப்பி வைத்துள்ளதோடு, எங்களுடைய கப்பல் மூலமாக கொண்டு வருவதற்கு 40 தொன் ஒட்சிசனையும் வழங்கியுள்ளது.

காலத்தின் தேவையறிந்து இந்திய அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. எனவே, இன்னும் பல உதவிகளை இந்தியா ஊடாக பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் எங்களுடைய வெளியுறவு கொள்கையில் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அதனை உணர்ந்து புதிய வெளியுறவு அமைச்சர் செயற்படுவார் என எதிர்பார்க்கின்றோம் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# இணையத்தில் கற்பித்தல்முறை தொடர்பான பயிற்சிப் பட்டறை

## ஈ–சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் ஏற்பாட்டில் நடந்தது




இணையத்தில் கற்பித்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் வெற்றிகரமாக பாடநெறியைப்பூர்த்திசெய்தவர்களுக்கான சான்றிதழ் முன்வைப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் ஏற்பாட்டில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள ஆசிரியர்களுக்காக இணையத்தின் ஊடாக கற்பித்தலை மேற்கொள்வதற்கான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயிற்சிகளை பூர்த்தி செய்தவர்களுக்கானசான்றிதழ்முன்வைப்பு விழா இணைய வழியில் கடந்த சனிக்கிழமை மாலை 9.30 மணிக்கு மிகவும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

ஐந்நூறு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் முதலில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த நூறு ஆசிரியர்களுக்கானசான்றிதழ்முன்வைப்பு நிகழ்வே இணையமூடாக நடைபெற்றது.

கனடாநாட்டில்ஆசிரியராகபணிபுரியும் இலங்கையில் வாழும் பல நூற்றுக்கணக்கான உயர்கல்வி பயிலும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு கண்ணுக்கு தெரியாமல் பலலட்சம் ரூபா பெறுமதியான கொடைகளை வழங்கிவரும் கொடையாளரும் சமூக சேவகருமான ஜெகந்நாதன் வைரவநாதன் இந்த பயிற்சி நெறியை நேரகாலம் பாராது இலவசமாக மேற்கொண்டு சிறந்த ஆளுமை நிறைந்த இணையவழியில் மிகச்சிறப்பாக கற்பிக்கும் ஆசிரியர்களை உருவாக்கி வருகின்றார்.

மேற்படி இணைய சான்றிதழ் முன்வைப்பு நிகழ்வு ஆசிரியர் ஜெகந்நாதன் வைரவநாதன் தலைமையில் நடைபெற்றதுடன் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும்சிறப்புவிருந்தினர்களாகஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் அதிபர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும் பூநகரி சிறி விக்னேஸ்வரா வித்தியாலய முதல்வர் லயன் குணசிங்கம் லெனின்குமாரும் பங்குபற்றினர். பயிற்சி நெறியை பூர்த்தி செய்த ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்டஆறுஆசிரியர்களின்கற்பித்தல் மாதிரியும் இந்த நிகழ்ச்சியில் முன் வைக்கப்பட்டது. மேலும் கனடா நாட்டைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி மேகலா வரவேற்புரையையும் யாழ் பல்கலைக்கழகத்தின் நடப்பாண்டு பட்டதாரி லயன் நிவேதன் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

மேலும் பயிற்சி நெறியை பூர்த்தி செய்யும் அடுத்த கட்ட ஆசிரியருக்கு கட்டம் கட்டமாக சான்றிதழ்கள் விரைவில் வழங்கி வைக்கப்படும்.

தற்போதைய இடர்கால சூழ்நிலையில் ஆசிரியர்கள் இணையவழியில் இணைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிறப்பாக கற்பிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் செய்யப்படும் இந்த பயிற்சியில் மலையகம், கிழக்கு மாகாணம் மற்றும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் ஆசிரியர்கள் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு வருகின்றமை விசேட அம்சமாகும்.

# பொருளாதார நெருக்கடிகளுக்கு நாடு முடங்கியமை காரணமல்ல!

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொவிட் தொற்றுப் பரவல் தேசிய அனர்த்தம் என்பதன் காரணமாகவே அந்த சவாலை எதிர்கொள்வதற்கு சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து தேசிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறுஅரசாங்கத்தைவலியுறுத்துகின்றோம்.

இதனை அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முயற்சியாக அரசாங்கம் கருதக் கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாட்டை முடக்காமல் அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகக் காணப்பட்டது.

எனினும் வர்த்தக சங்கங்கள் உள்ளிட்டவை சுயமாக முடக்கத்தை ஆரம்பித்தன. இதனை எதிர்பார்த்திராத ஜனாதிபதி விருப்பம் இல்லாவிட்டாலும் நாட்டை முடக்க வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.

எனவே தான் தொடர்ந்தும் முடக்க நேரிட்டால் தியாகங்களுக்கு தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி மறைமுகமாக நாட்டு மக்களுக்கு எச்சரித்துள்ளார்.

இந்த மறைமுக எச்சரிக்கையின் மூலம் எதிர்வரும் தினங்களில் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றைத் தவிர்க்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்றின் காரணமாக இரு வாரங்களுக்கு நாட்டை முடக்கியமை மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் அல்ல. அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இன்மையே இதற்கான பிரதான காரணி என்றும் அவர் தெரிவித்தார்.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் மட்டக்களப்பில் கைதானார்

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிவேம்பு பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வியாபாரத்துக்காக 2 கிலோ 185 கிராம் கேரளா கஞ்சாவை எடுத்துச்சென்ற மாவடிவேம்பைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி ஒருவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து சம்பவதினமான ஞாயிறு இரவு 7 மணியளவில் மாவடிவேம்பு பகுதியில் இராணுவ புலனாய்வு பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து கண்காணிப்பில் ஈடுபட்டனர். இதன்போது மாவடிவேம்பு பகுதியைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி மோட்டார் சைக்கிளில் பொதி செய்யப்பட்ட 2 கிலோ 185 கிராம் கேரள கஞ்சா வியாபாரத்துக்காக எடுத்துச் சென்றபோது அவரை இராணுவ புலனாய்வுப் பிரிவினர் வீதியில் வைத்து மடக்கி பிடித்து கைதுசெய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட கஞ்சா வியாபாரியையும் மீட்கப்பட்ட கேரள கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும், இராணுவ புலனாய்வு பிரிவினர்தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும், இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உண்மையை மறைக்க முடியாது

**மேல்நீதிமன்ற நீதிபதிகளும், நீதிவான்களும் கட்டாயம் பங்குபற்ற வேண்டும் என்று வற்புறுத்தலுடன் நீதிச்சேவை ஆணைக்குழு முந்திய வாரத்தில் நடத்திய மெய்நிகர் முறையிலான கருத்தரங்கின் தாக்கம் – சலசலப்பு – இன்னும் அடங்கவில்லை.**

**இது விடயத்தில், இங்கிலாந்தின் முன்னாள் பிரதம நீதியரசர் ஹேவார் சுட்டிக்காட்டிய *"நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்"* – என்ற நீதித்துறையின் அடிப்படை முறைமையை மேற்கோள் காட்டியிருக்கின்றது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.**

**மேற்படி சர்ச்சைக்குரிய மெய்நிகர் கருத்தரங்கு தொடர்பாக பிரதம நீதியரசரும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவருமான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவுக்கும், ஆணைக்குழுவின் மற்றைய இரு உறுப்பினர்களான நீதியரசர்கள் ஜனாதிபதி சட்டத்தரணி புவனேக அலுவிஹார, எல்.ரி.வி.தெல்தெனிய ஆகியோருக்கும் அனுப்பி வைத்த கடிதத்திலேயே சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.**

**கொவிட் தொற்றுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் மக்கள் போராட்டங்கள், எழுச்சிகள் தொடர்பில் கடுமையான – ஒரே மாதிரியான – தடுப்பு உத்தரவுகளை விடுப்பதற்கு நீதிபதிகளையும், நீதிவான்களையும் வழிப்படுத்தும் விதத்தில் – நோக்கத்தில் – இந்த மெய்நிகர் கருத்தரங்கு கூட்டப்பட்டது என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.**

**நீதிபதிகள் தமக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்கள், சான்றுகள், வாதங்களின் அடிப்படையில் சுயாதீனமான முடிவுகளை எடுத்து, நீதியைப் பரிபாலிக்க வேண்டுமே தவிர, மேலிருந்து திணிக்கப்படும் பொதுவான உத்தரவுகள், கட்டளைகள், வழிகாட்டல்களில் அல்ல. அப்படி கட்டளைகளைப் பலவந்தமாகத் திணிப்பது நீதித்துறை மீதான அப்பட்டமான தலையீடு என ஆட்சேபனைகள் – எதிர்ப்புக்குரல்கள் – கிளம்பியிருக்கின்றன.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன் தனிப்பட்ட சட்டத்தரணியாகச் செயற்பட்டு வந்த ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றியைத்தான் தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்கி, நாட்டின் நீதி அமைச்சராக நியமித்திருக்கின்றார்.**

**இந்தப் பின்புலத்தில் நீதித்துறையை தமது வசதி, விருப்பு, தேவை, எதிர்பார்ப்பு போன்றவற்றுக்கு ஏற்ற விதத்தில் வழிப்படுத்தும் தந்திரோபாயங்களில் நிறைவேற்றுத்துறை ஈடுபட்டிருப்பதாகப் பொதுவாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்த பின்னணியிலேயே இந்தத் கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக் கின்றது.**

**அதுவும், அரசுக்கு எதிராக – அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக – தொழிற்சங்கங்களும், எதிர்க்கட்சிகளும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்த போது, அவற்றை நீதிமன்றங்கள் மூலம் தடுப்பதற்குப் பொலிஸார் எடுத்த முன்முயற்சிகள் தோற்றுப்போய், அந்தப் போராட்டங்களுக்கு சார்பான கருத்தியல் பொதுவாக மேலெழுந்த சூழ்நிலையிலேயே இந்த மெய்நிகர் கருத்தரங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.**

**எது, எப்படி என்றாலும் – எத்தகைய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் –**

**இந்தக் கருத்தரங்கு மூலம் நீதிபதிகளும், நீதிவான்களும் தவறான முறையில் அழுத்தத்துக்கு உட்படுத்தப்பட்டனர், நீதித்துறையில் பிழையான முறையில் தலையீடு செய்யப்பட்டது என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் வெளிக்கிளம்பினாலும்–**

**இது, இலத்திரனியல் ரீதியான மெய்நிகர் கருத்தரங்கு என்பதும், அதில் பல நூற்றுக் கணக்கானோர் பங்கு கொண்டனர் என்பதும் மறுக்கப்படக் கூடியதல்ல.**

**பல தரப்பினரும் இதில் பங்குபற்றினர் என்பதால் எங்கோ ஓரிடத்தில் இந்நிகழ்வு முழுவதும் சான்றளிக்கக் கூடிய விதத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.**

**இந்தக் கருத்தரங்கு மூலம் நீதித்துறை மீது அநீதியான முறையில் தலையீடு செய்யப்பட்டிருப்பின் –**

**இன்றைய அதிகார முறைமையின் கீழ் அது மறுக்கப்பட்டாலும், மறைக்கப்பட்டாலும் கூட, நிரந்தரமாக அது மறக்கப்பட்டு விடாது, மறைக்கப்பட்டு விடாது.**

**என்றோ ஒரு நாள் உண்மை வெளிப்படும் விதத்தில் அது அம்பலமாகும். அதை யாரும் தடுக்க முடியாது என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.**

**அதற்குக் காத்திருப்பதுதான் இன்றுள்ள ஒரே மார்க்கம்.**

## போலித் தகவல் வெளியிடுவோரை கைது செய்வதாயின் ஆளும் தரப்பில் பெரும்பாலானவர்கள் கைதாக நேரிடும்!

### சஜித் கிண்டல்



போலியான அறிக்கைகளை வெளியிடுபவர்கள் கைது செய்யப்படுவார்களாயின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்து இன்று வரை ஆளும் தரப்பினர்கள் வெளியிட்ட அறிக்கை பல போலியானதாகும். அவ்வாறாயின் அரசாங்கத்தில் 90 சதவீதமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

எரிபொருள் பற்றாக்குறை தொடர்பில் கருத்துரைத்த கனிய வளங்கள் முன்னணியின் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித கைது செய்யப்பட்டமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு மக்கள் எதிர்ப்பு வெளியாகியுள்ளதால் அரசாங்கம் பழிவாங்கும் படலத்தை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்பமாகவே தொழிற்சங்கத் தலைவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

நாட்டில் எரிபொருள் பயன்பாட்டுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என ஓகஸ்ட் 8 ஆம் திகதி வெளிப்படுத்தினோம் 'எரிவாயு பால் மா வரிசையில் எரிபொருள் வரிசைக்குமா அரசாங்கம் தயாராகி வருகிறதா?' என்று ஒரு விசேட ஊடக வெளியீட்டை வெளியிட்டோம். அதனைத் தொடர்ந்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உதய கம்மன்பில டுவிட்டர் செய்தியை வெளியிட்டு எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடும். ஆகவே மக்கள் எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வலியுறுத்தினார்.

எரிபொருள் தொடர்பாக இத்தகைய சூழ்நிலை நிலவும் போது இத்தகைய கணிப்பைச் செய்த ஆனந்த பாலித கைது செய்யப்பட்டதன் நோக்கம் ஆபத்தானது என்பதில் சந்தேகமில்லை. ஆனந்த பாலிதவை பொய்யான அறிக்கையை வெளியிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்துள்ள அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் இன்று வரை வெளியிட்ட பொய்யான அறிக்கைகளை ஆராய்ந்தால் அரசாங்கத்தின் 90 சதவீதத்துக்கும் அதிகமான உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கொரோனா அச்சுறுத்தல் நாட்டில் தீவிரமடையலாம் என கடந்த ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி அன்று அரசாங்கத்துக்கு வலியுறுத்தினோம். இலங்கைக்கு அத்தகைய ஆபத்து இல்லை என்றே அரசாங்கம் கூறியது.

அதே ஆண்டு பெப்ரவரி 5 ஆம் திகதி கொரோனா அச்சுறுத்தல் தொடர்பாக 'முகக் கவசங்கள்' மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திடம் கூறியபோது அப்போதைய பொறுப்பான அமைச்சர் கொரோனாவிலிருந்து பாதுகாப்பாக இருக்க முகக்கவசங்கள் அணிய வேண்டியது அவசியமில்லை என்று கூறினார்.

கொரோனா பேரழிவைக் கட்டுப்படுத்த உலகம் முழுவதும் தடுப்பூசி போடும் போது பொறுப்புள்ள அமைச்சர்கள் முட்டிகளை ஆறுகளில் வீசியும் அனுமதியற்ற பாணிகளை கூட நாடாளுமன்றத்தில் கூட பிரசாரம் செய்து போலியான பிரசாரம் செய்தனர்.

கொவிட் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கடந்த மே 17 ஆம் திகதி இலங்கையில் சுகாதார சேவைகள் துறைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களின் பட்டியலை ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அனுப்பியிருந்தாலும் அரசாங்கத்திடம் நிதியில்லை எனத் தெரிவித்து பொதுமக்களிடம் ஆதரவு கோரியதும் இவற்றுக்கு மத்தியிலாகும்.

கடந்த ஜனவரி 11 ஆம் திகதி அன்று ஒரு பிரபல அரசாங்க அமைச்சர் அரசாங்கத்திடம் போதுமான பணம் இருப்பதாகக் கூறினார். கடந்த மே 23 ஆம் திகதி அன்று மற்றொரு அமைச்சர் அரசாங்கத்திடம் போதுமானளவு பணம் இருப்பதை உறுதிப்படுத்தினார். இந்த முரண்பாடான அறிக்கைகளை வெளியிட்ட அமைச்சர்கள் மீது அரசாங்கம் எடுத்த நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்புகிறோம்.

கைது செய்யப்பட வேண்டியவர்கள் முழுமையான பொய்மையை மற்றும் நம்பகத்தன்மையின்மையிலான கருத்தியல்களை வெளிப்படுத்திய அடிப்படையிலான அரசாங்கமே தவிர நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகள் மற்றும் அவதானங்கள் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துபவர்கள் அல்லர் என்பதை வலியுறுத்துகிறோம். அதேபோல் இந்தத் தன்னிச்சையான தண்டனை நடவடிக்கைகளுக்கு எங்கள் எதிர்ப்பையும் வெறுப்பையும் வெளிப்படுத்துகிறோம். - என்று தெரிவித்தார்.

## சடலங்கள் வைத்தியசாலைகளில் குவிந்து கிடக்கின்றனவா? விசேட நடவடிக்கைக்காக பொலிஸ் அத்தியட்சகர் நியமனம்

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழப்போரின் சடலங்கள் வைத்தியசாலைகளில் குவிந்து கிடக்கின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், அது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க பிரதான ஐந்து வைத்தியசாலைகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுத்துறை வைத்தியசாலை, றாகம கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை மற்றும் பாணந்துறை வைத்தியசாலை ஆகியவற்றின் தகவல்கள் தொடர்பில் தேடிப் பார்த்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவே பொறுப்பாக இவ்வாறு பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ மேலும் குறிப்பிட்டார்.

கொவிட் நிலைமையால் உயிரிழப்போரின் சடலங்கள் மேல் மாகாண வைத்தியசாலைகளில் ஆங்காங்கே கிடக்கின்றன எனத் தகவல்கள் வெளியான போதும் அவை பொய்யானவை எனத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், வைத்தியசாலைகளின் பொலிஸ் காவலரண் அதிகாரிகள் ஊடாக இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக குறித்த பொலிஸ் அத்தியட்சகரை நியமித்துள்ளதாகக் கூறினார்.

## 80 ஆயிரம் டோஸ்கள் பைஸர் நாடு வந்தடைவு

பைஸர் தடுப்பூசியின் மேலும் 80 ஆயிரம் டோஸ்கள் நாட்டை வந்தடைந்துள்ளன.

கட்டார் ஏயர்லைன்ஸ் விமானத்தின் மூலமாக 476 கிலோ கிராம் எடையுள்ள இந்த அளவுகள் நேற்று அதிகாலை 2.15 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

பின்னர் அவை பாதுகாப்பாக தரையிறக்கம் செய்யப்பட்டு, அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதனிடையே சீனாவிடமிருந்து மேலும் 10 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் இன்று நாட்டை வந்தடையவுள்ளன.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 54

ந.வித்தியாதரன்

எஸ்.டி.சிவநாயகம் ஐயா குறித்து நேற்று ஒரு விடயம் குறிப்பிட்டிருந்தேன். ஏதேனும் ஒரு விவகாரம் தொடர்பில் முடிவு எடுக்க முன்னர் அது குறித்து அவர் தீர்க்கமாக ஆராய்வார், தனது மனதுக்கு சரியானது என்று பட்டால் அது குறித்து ஒரு முடிவு எடுத்த பின்னர் அதில் அவர் தீர்க்கமாக இருப்பார், உறுதியாக செயற்படுவார், அசைந்து கொடுக்கவே மாட்டார் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்த விடயத்தில் இதுவரை சம காலத்தில் பல பத்திரிகை ஆசிரியர்களை நான் பார்த்திருக்கிறேன். எனினும் ஜாம்பவான் சிவநாயகம் மாதிரி ஒருவரை நான் கண்டதில்லை.

இந்த விடயத்தில் அவர் ஒரு 'பிடிச்சுராவி'!

அவர் ஆசிரியராக இருந்து வழி நடத்திய தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளை வெளியிட்டது சுயாதீன பத்திரிகா சமாஜம். அதன் நிர்வாகிகள் சிங்களவர்கள். சிவநாயகம் அதில் ஓர் இயக்குநராக மட்டுமே இருந்தார். அவ்வளவே. நிறுவனத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், மட்டுப்படுத்தல்கள், தீர்மானங்கள் என சில இடக்கு முடக்குகள் சிவநாயகம் ஐயாவுக்கு இருந்தன. அவற்றுக்கு மத்தியிலும் அவர் தம்முடைய தீர்மானங்களில், முடிவுகளில் தீர்க்கமாகவும் உறுதியாகவும் செயற்பட்டார்.

பத்திரிகை ஆசிரியர் கதிரையில் பத்திரிகையின் உரிமையாளர் அல்லாத ஒருவர் இருந்து கொண்டு இப்படித் தீர்மானங்கள் எடுத்து நடைமுறைப்படுத்துவது என்பது மிகவும் கஷ்டமான விடயம் என நான் நினைக்கிறேன். அதையும் சிவநாயகம் ஐயா செயல்படுத்திக் காட்டினார்.

அவரின் வழிவந்த எனக்கோ நிலைமை இன்னும் இலகுவாக இருந்தது. உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் 25 ஆண்டுகள் நான் பணியாற்றிய காலப்பகுதியில், அந்த மட்டுப்படுத்தல்கள், கட்டுப்பாடுகள் எனக்கு இருந்ததில்லை.

கொழும்பில் தினபதி - சிந்தாமணி பத்திரிகைகளை விட்டு வெளியேறி நான் வந்தபின்னர், உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளில் ஆரம்பித்த முறைமையைச் சுருக்கமாக 'என் எழுத்தாயுதம்' என்ற என் நூலில் 'நன்றியோடு சில நினைவுகள்' என்ற முற்குறிப்பில் நான் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்:-

"பேனா தூக்கிப் போராட வேண்டிய நாம் ஆயுதம் தூக்கச் செல்வதா என்று மனப் போராட்டம் நடந்து கொண்டிருந்த அச்சமயத்தில்தான் நான் வளர்ந்த - அல்லது நானும் சேர்த்து வளர்த்த - ஜொலி ஸ்டார் விளையாட்டுக் கழகம் சரவணபவன் என்ற இளம் தொழில் முயற்சியாளருடனான அறிமுகத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தது.

"அடுத்த 25 ஆண்டுகள் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறை தளத்திலே ஆழமான தடங்களை நான் பதித்துச் செல்வதற்கான வலுவான செல்வாக்கை - மிக உறுதியான வாய்ப்பை - அந்தச் சந்திப்பும், அதைத் தொடர்ந்து உருவான உறவுப் பிணைப்பும் எனக்குத் தந்தன.


"உதயன் - சஞ்சீவி - சுடர்ஒளி என்ற பத்திரிகைத் தரு பெரு விருட்சமாக உருவாவதற்கான ஆரம்ப விதைப்பில் தொடங்கி அடுத்த 25 ஆண்டுகள் அதைப் பண்படுத்தி, வளர்த்தெடுப்பதில் பிரதான பங்களிப்பும் இதன் மூலம் எனக்கு முழு அளவில் எனக்குக் கிட்டின.

"யுத்த நெருக்கடியிலும், போரவலத்திலும், பேரழிவிலும் ஈழத் தமிழினம் சிக்கிக் கொண்டிருக்கையில் - ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் உக்கிரம் பெற்று உச்சமடைந்திருந்த அந்த வேளையில் எனக்குச் சரியென்று பட்டதை எனது நேர்மை திறனில் நம்பிக்கை வைத்து எழுதுவதற்கான வாய்ப்பையும் சுதந்திரத்தையும் உதயன் - சுடர்ஒளி நிறுவனம் - எந்த மட்டுப்படுத்தல்களோ கட்டுப்பாடுகளோ இன்றி எனக்கு எப்போதும் தந்தே இருந்தது.

"2010 ஏப்ரலில் சுமார் 25 வருட பணிக்குப் பின்னர் நான் உதயன் - சுடர்ஒளி ஆசிரியர் பதவிகளிலிருந்து நானாக விலகிக் கொள்ளும் கடைசி நாள் வரை அந்தத் தற்றுதுணிவு அதிகாரமும் மதிப்பும் செல்வாக்கும் உரிமையும் முழு அளவில் எனக்கு வழங்கப்பட்டேயிருந்தன என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்."

- இது என் நூலில் நான் குறிப்பிட்டவை.

நான் என் மனதுக்கு சரி என்று பட்டதை - நான் எனக்குச் சரி என்று தோன்றியதை - வெளிப்படுத்த முடியாத சூழல் எப்போதும் வரும் என்று என் மனதில் என்று பட்டதோ அன்றே நான் உதயனை விட்டு விலகினேன்.



தமிழ்மறைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினர்—1955.
இருப்போர் (இடமிருந்து வலம்) :—கு. பூர்ணனந்தன், பி. ஏ., சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், ஆசிரியர் இ. சி. சோதிநாதன் (செயலாளர்), பண்டிதர் கா. பொ. இரத்தினம், எம்.ஏ., பி.ஓ.எல். (தலைவர்), பண்டிதர் மு. ஆறுமுகன் (பொருளாளர்), வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், பண்டிதர் க. முருகேசு.
நிற்போர் :—நா. ப. பாலசந்திரன், இ. இரத்தினம் பி. ஏ., சி. க. நடராசா, வித்துவான் ச. சபாபதி, ஆசிரியர் கு. வி. செல்லத்துரை.

கடந்த ஐந்து ஆண்டுகளாகக் 'காலைக்கதிர்' ஆசிரியராகப் பணிபுரிகிறேன். அந்த ஆசிரிய பீடத்தைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள். ஒன்று - அதில் வெளியாகும் ஒவ்வொரு செய்திக்கும், ஒவ்வொரு சொல்லுக்கும் நானே பொறுப்பு. நான் விரும்பியதை, எனக்குச் சரி என்று பட்டதை நான் எழுதவும் பிரசுரிக்கவும் முற்றுமுழுதான சுதந்திரம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆக, பல மட்டுப்படுத்தல்கள், கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அந்தக் கொள்கையை உறுதியாகக் கைப்பிடித்து வழி காட்டி நின்றார் சிவநாயகம் ஐயா.

அதை - அந்த வழியை - மூன்று தசாப்த காலத்திற்கு மேல் பின்பற்றும் வாய்ப்பும் வசதியும் - அவருக்கு இருந்ததற்கு அப்பால் தாராளமாக - எனக்கு கிடைத்தன, கிடைத்துக் கொண்டிருக்கின்றன, நான் ஆற்றுகின்றேன்.



எனினும் ஒரு வேறுபாடு உண்டு. நாட்டுச் சூழ்நிலையும், கொடூர யுத்தமும், ஆயுத மோதல்களும், இயக்க முரண்பாடுகளும், கடுமையான சட்டங்களும் வேறு தளத்தில் நமக்கு வித்தியாசமான அழுத்தங்களை தந்து கொண்டிருந்தன என்பது உண்மை. அவை சிவநாயகம் ஐயா எதிர்கொள்ளாத வேறு விதமான பரிமாணங்கள்.

அவற்றுக்கும் மத்தியிலும் கூட சிவநாயகம் ஐயா காட்டித் தந்த அந்தப் பாதையை - எடுத்த முடிவில் தீர்மானமாக செயற்படும் துணிவை - நான் கைவிட வில்லை என்றே சொல்வேன்.

இந்தியப் படைகள், புலிகள், வேறு இயக்கங்கள், பொலிஸார், படையினர், சட்டத்துறையினர், அரசியல் பிரகிருதிகள் எனப் பல தரப்பினருடனும் இந்த முப்பத்தி ஐந்து ஆண்டு காலத்தில் முரண்பட்டு நின்றிருக்கிறேன். ஆனால் எடுத்த முடிவுகளில் இருந்து பின்வாங்கவில்லை. பலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஆனால் அவை என் சுய புராணம் ஆகிவிடும். இது சிவநாயகம் ஐயா பற்றிய தொடர். அதனால் விட்டுவிடுகிறேன்.

ஆனால் இப்படி உறுதியாகச் செயற்பட வேண்டும் என்ற பண்பை எங்களுக்குச் சொல்லி, போதித்து, முன்மாதிரியாக நடந்து காட்டித்தந்தவர் சிவநாயகம் ஐயா.

அரசியலாகட்டும், இலக்கியங்களாகட்டும், பொதுச் சர்ச்சைகளாகட்டும் சிவநாயகம் ஐயா தமது பத்திரிகையில் ஒரு நிலைப்பாடு எடுத்தார் என்றால் அதில் மாற்றமோ பின்னடிப்போ இருக்காது. மாற்றுக் கருத்துக்களுக்கும் தாராளமாக இடம் அளிப்பார். ஆனால் தனதும், தனது பத்திரிகையினதும் நிலைப்பாடு இதுதான் என்பதில் அவர் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இருப்பார். அதனைப் பத்திரிகையிலும் வெளிப்படுத்திப் பகிரங்கப்படுத்தியிருப்பார்.

பத்திரிகை ஆசிரியர் பீடப் பொறுப்புக்கு வர வேண்டியவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விவகாரம் இது.

ஊடக முதலாளி அல்லது நிறுவனம் விரும்பு வதை எல்லாம் அவ்வப்போது பிரதிபலித்து விட்டு, அவர்களின் ஊதுகுழல்களாக, பச்சோந்திகளாக, பத்திரிகைகளையும் ஊடகங்களையும் நடத்திவிட்டு வந்து, வருடக் கணக்கான கால தம் சேவை குறித்துத் தற்புகழ்ச்சி பாடும் தற்போதைய ஊடகவியலாளர்களைப் பார்க்கும்போது எனக்கு சிரிப்பு வருவதுண்டு.

சரி, ஓர் ஊடகவியலாளன் இவ்வளவு காலம் பணிபுரிந்தார், அந்தச் சிறப்பு, அதன் பெறுபேற்றை அடையாளம் காண்பது எப்படி, புள்ளியிடும் முறை என்ன என்று எனக்குள் ஒரு கணிப்பை நான் வைத்திருக்கிறேன். அதை நாளை பார்ப்போம். அதற்கான வழிகாட்டலைக் காட்டியதும் கூட சிவநாயகம் ஐயாவின் முன்மாதிரி தான்..!

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | கணிதம் | அலகு 15

## நீளம்


* நீளங்களை அளக்க பயன்படும் கருவிகள்

15cm , 30cm அடிமட்டம்
ஒரு மீற்றர் கோல்
உருக்கு அளவுநாடா
துணி அளவுநாடா




* நீளங்களை அளக்க பயன்படும் அலகுகள்
mm
cm
m
km

* நீளத்தை அளக்கும் முறை




பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக

| சந்தர்ப்பங்கள் | பொருத்தமான உபகரணம் | அலகு |
|---|---|---|
| உமது கணிதபாடப்புத்தகத்தின் நீளம் | | |
| ஆசிரியரின் மேசையின் உயரம் | | |
| வகுப்பறையின் நீளம் | | |
| பரீட்சை மண்டபத்தின் நீளம் | | |
| உமது கொப்பியில் வரையப்பட்ட கோட்டின் நீளம் | | |

* நீளத்தை அளக்கும் அலகுகளிற்கு இடையிலான தொடர்பு

mm – cm
cm – m
m – km

* மில்லிமீற்றரிற்கும் சென்ரிமீற்றரிற்கும் இடையிலான தொடர்பு
1) cm இல் உள்ளதை mm இற்கு மாற்றுக.

1cm = 10mm

7cm = 7 × 1 cm
= 7 × 10 mm
= 70mm

5cm = 5 × 1cm
= 5 × 10 mm
= 50mm

2) cm , mm இல் உள்ளதை mm இற்கு மாற்றுக

1cm = 10mm

4cm 7mm = 4cm + 7mm
= 4 × 1cm + 7mm
= 4 × 10mm + 7mm
= 40mm + 7mm
= 47mm

6cm 8mm = 6cm + 8mm
= 6 × 1cm + 8mm
= 6 × 10mm + 8mm
= 60mm + 8 mm
= 68mm

3) mm இல் உள்ளதை cm இற்கு மாற்றுக

$1mm = \frac{1cm}{10}$

$20mm = \frac{20cm}{10}$
= 2cm

$31mm = \frac{31cm}{10}$
= 3.1cm

A) பின்வரும் cm இல் உள்ளதை mm இல் தருக

1) 4cm = .......mm
2) 8cm = .......mm
3) 2.6cm = ......mm
4) 3.4cm = .......mm
5) 1.8cm = ......mm

B) பின்வரும் cm, mm இல் உள்ளதை mm இல் தருக

1) 5cm 7mm = .........mm
2) 6cm 4mm = ...............mm
3) 4cm 9mm = .........mm
4) 3cm 4mm = .............mm
5) 2cm 1mm = ..........mm

C) பின்வரும் mm இல் உள்ளதை cm இல் தருக

1) 40mm = .......cm
2) 100mm = .........cm
3) 25mm = .......cm
4) 125mm = .........cm
5) 505mm = ........cm

சென்ரிமீற்றரிற்கும் மீற்றரிற்கும் இடையிலான தொடர்பு

1. mஇல் உள்ளதை cm இற்கு மாற்றுக

1m = 100cm

3m = 3 × 1m
= 3 × 100cm
= 300cm

2m = 2 × 1m
= 2 × 100cm
= 200cm

2. m, cm இல் உள்ளதை cm இற்கு மாற்றுக
1m = 100cm

2m 75cm = 2m + 75cm
= 2 × 100cm + 75cm
= 200cm + 75cm
= 275cm

3m 5cm = 3m + 5cm
= 3 × 100cm + 5cm
= 300cm + 5cm
= 305cm

3. cm இல் உள்ளதை m இற்கு மாற்றுக

$1cm = \frac{1m}{100}$

$200cm = \frac{200m}{100}$
= 2m

$325cm = \frac{325m}{100}$
= 3.25m

D. பின்வரும் m இல் உள்ளதை cm இல் தருக
1) 5m = ..........cm
2) 10m = .........cm
3) 2.25m = .......cm
4) 6.05m = .......cm
5) 20.05m = ........cm

E. பின்வரும் m, cm இல் உள்ளதை cm இல் தருக
1) 4m 25cm = ..........cm
2) 2m 50cm = .........cm
3) 6m 4cm = ...........cm
4) 10m 5cm = .........cm
5) 7m 50cm = .........cm

F. பின்வரும் cm இல் உள்ளதை m இல் தருக
1) 500cm = ...........m
2) 1000cm = ..........m
3) 650cm = ..........m
4) 725cm = .......... m
5) 1005cm = ........m

மீற்றரிற்கும, கிலோமீற்றரிற்கும் இடையிலான தொடர்பு
1. km இல் உள்ளதை m இற்கு மாற்றுக.

1km = 1000m

2km = 2 × 1km
= 2 × 1000m
= 2000m

3.25km = 3.25 × 1km
= 3.25 × 1000m
= 3250m

2. km, m இல் உள்ளதை m இற்கு மாற்றுக

1km = 1000m

2km 500m = 2km + 500m
= 2 × 1000m + 500m
= 2000m + 500m
= 2500m

3km 25m = 3km + 25m
= 3 × 1000m + 25m
= 3000m + 25m
= 3025m

3. m இல் உள்ளதை km இற்கு மாற்றுக

$1m = \frac{1km}{1000}$

$2000m = \frac{2000km}{1000}$
= 2km

$1250m = \frac{1250 km}{1000}$
= 1.25km

G. பின்வரும் km இல் உள்ளதை m இல் தருக

1) 4km =..........m
2) 8km = .............m
3) 7.5km = ....... m
4) 3.25km = ..........m
5) 6.125km = ........m

H. பின்வரும் km, m இல் உள்ளதை m இல் தருக

1) 5km 125m = ........... m
2) 4km 320m = ........... m
3) 2km 25m = ........... m
4) 10km 1m = ............ m
5) 25km 5m = ............ m

I. பின்வரும் m இல் உள்ளதை km இல் தருக.

1) 5000m =................ km
2) 4000m = ........... km
3) 6250m = ............. km
4)750m = ........... km
5) 2045m = ........... km

தொடர்ச்சி 07 ஆம் பக்கத்தில்

ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் சேதனப் பசளையை ஊக்குவிக்க விழிப்புணர்வு



யாழ்ப்பாணம்,ஒக.24

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு பிரசாரம் நேற்று (திங்கட்கிழமை) யாழில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் கால போகத்தில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் ஹெக்டேயர் அளவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சலாதேவி சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

குறித்த நெற்செய்கைக்கு தேவையான சேதனப் பசளையினை விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்ய வேண்டிய கடப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய விவசாய அமைச்சின் ஆலோசனை மற்றும் விவசாய திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய விவசாயிகள் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக நேற்று ஒரு வாகனப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வாகனப் பேரணியானது நல்லூர், சண்டிலிப்பாய், உடுவில் மற்றும் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விவசாய போதனாசிரியர் பிரிவுகளில் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது விவசாயிகளுக்கு சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விழிப்புணர்வு பேரணியில் வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீரங்கன், விவசாய போதனாசிரியர்கள் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவசர விடயங்கள் மட்டுமே விசாரணைக்கு எடுக்கப்படும்

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

இலங்கையில் கொவிட் நிலைமை காரணமாக நேற்று (திங்கட்கிழமை) முதல் எதிர்வரும் 31ஆம் திகதி வரை நீதிமன்றத்தில் ‘அவசர’ விடயங்கள் மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அவசரகால விவகாரங்கள் மாத்திரம், திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

அவசர விடயங்கள் தொடர்பான விசாரணைகள், நீதிமன்றத்தில் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

இதன்போது அனைத்து சட்டத்தரணிகளும் கொவிட் பரவுவதைத் தடுக்க சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை முழுமையாகக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று முதல் எதிர்வரும் 31 வரை திட்டமிடப்பட்ட விசாரணைகளுக்காக புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | கணிதம் | அலகு 15


## நீளம்

∗ சுற்றளவு

மூடிய தளவுருவொன்றைச் சுற்றியுள்ள மொத்த நீளம் அதன் சுற்றளவு எனப்படும்.





இச் செவ்வகத்தின் சுற்றளவு = 10cm + 6cm + 10cm + 6cm
= 32cm





இவ் உருவின் சுற்றளவு = 5cm + 4cm + 2cm + 2cm + 3cm + 2cm
= 18cm


பின்வரும் தளவுருக்களின் சுற்றளவைக் காண்க





(1) ____________





(2) ____________




(3) ____________




(4) ____________




(5) ____________

ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி
வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்
விரிவுரையாளர்
யா/தேசிய கல்வியியற் கல்லூரி

# நாடு முழுமையாக முடக்கப்பட்டமையால் நாள் ஒன்றுக்கு 1,500 கோடி ரூபா நட்டம்

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையால் அரசாங்கத்துக்கு நாளாந்தம் 1,500 கோடி ரூபா நட்டம் ஏற்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக முடிந்த அளவு விரைவில் முடக்க நிலையை குறைத்துக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனை போன்ற நிலைமை ஏற்பட்டால் நாட்டின் அபிவிருத்தி வேகத்துக்கும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தாக்கங்களும் ஏற்படும்.

நாட்டை மூடுவதனால் ஏற்படும் நட்டத்தைக் குறைத்துக்கொள்ள எங்களால் முடிந்தளவு வேகமாக நாட்டை வழமைக்கு கொண்டுவர வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எந்தத் தடுப்பூசிகளும் பெறாதவர்களே கொவிட்டால் அதிகம் மரணமடைந்தனர்

எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியினையும் பெற்றுக்கொள்ளாதவர்களே இலங்கையில் அதிகளவில் கொரோனாத் தொற்றால் மரணித்துள்ளனர் எனத் தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் பதில் பிரதானி விசேட வைத்தியர் சமித்த கினிகே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுவரை நாட்டில் கொரோனாத் தொற்றால் மரணித்தவர்களின் அடிப்படையில் 91சதவீதமானவர்கள் எந்தவொரு தடுப்பூசியும் செலுத்தப்படாதவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஒரு தடுப்பூசி மாத்திரம் செலுத்தப்பட்டவர்களில் 8 சதவீதமானவர்கள் உயிரிழந்தனர். அதேநேரம், ஒரு சதவீதமானவர்களே இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்ட நிலையில் தொற்றால் உயிரிழந்தனர்.

எனவே, பொதுமக்கள் தடுப்பூசியை செலுத்திக்கொள்ளும் பட்சத்தில் மரணங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும் என தேசிய தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பதில் பிரதானி விசேட வைத்தியர் சமித்த கினிகே குறிப்பிட்டுள்ளார்.

# எசல பெரஹெரவில் பங்கெடுத்த 45 கலைஞர்களுக்கு கொரோனா

கண்டி, எசல பெரஹெரவில் பங்கேற்ற நடனக் குழுவில் இணைந்திருந்த 45 கலைஞர்கள் கொவிட் - 19 இற்கு சாதகமாக சோதனை செய்துள்ளனர் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரந்தோலி பெரஹெரவில் பங்கேற்ற நடனக் குழுவில் 76 கலைஞர்களுக்கு விரைவான அன்டிஜென் சோதனைகள் நடத்தப்பட்டமையைத் தொடர்ந்து வெளியான முடிவுகளிலேயே கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில்கொரோனாத்தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமையுடன், அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எசல பெரஹெர விழாவின் இறுதி ரந்தோலி பெரஹரா கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதி உலா வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வைத்தியர் ஒருவரை ரிஷாத் அச்சுறுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வைத்தியர் ஒருவரை அச்சுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உதவி சிறை அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வைத்தியர் பொரளை பொலிஸில் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் நோயாளர் ஒருவருக்கு கடந்த 15 ஆம் திகதி வைத்தியர் சிகிச்சை வழங்கிய சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனால் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 109

**314. ஆனந்தபுரத்தில் இருந்த மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அவர்களை நம்பி நின்றார்களா? அல்லது புலிகள் அவர்களை பகடைக்காய்களாக வைத்திருந்தார்களா?**

எனது அபிப்பிராயம் அந்த மக்களிடம் முகாம்களிலிருந்தபோதும், பின்னர் அவர்களில் சிலர் வெளியேறி வவுனியாவில் பல இடங்களிலும் தங்கி தமது புதிய தொழில் முயற்சிகளிலும் தமது பிள்ளைகளினது கல்வி நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த உதவிகள் செய்தபோதும், கேட்டவைகள். பின்னாளில் படகுகளில் அகதிகளாக வந்த அவர்களது விண்ணப்பங்களுக்கு உதவிதந்தபோது அவர்களது அனுபவங்களாக கேட்டவையிலும் இருந்து எனது ஆதங்கமாக சொல்லுகிறேன்.

இதை ஆனந்தபுரம் என்று பார்க்காமல் கடைசியாக முள்ளிவாய்க்கால் எனவும் சேர்த்துப் பார்க்கலாம். சமரின் தளங்கள் வேறு, சமரின் காலம், நேரத் தன்மை, விரக்தி, அவநம்பிக்கை என்ற எல்லாமே வெவ்வேறாக இருக்கும்போது, கருத்துக்களில் பலமான வேறுபாடுகள் இருந்தன.

இத்தகைய சந்திப்புகள் எனக்குக் கிட்டும் போதெல்லாம் இறுதி யுத்தம் குறித்து உரையாடுவது வழக்கம். அதேபோல் அகதி விண்ணப்பதாரரின் அனுபவத்துக்கு மேலாக அந்தச் சமர்களில் அவர்கள் கண்டது, கேட்டது, அபிப்பிராயங்கள் என துழாவுவது வழமை. இது கதைகள் மீதான ஆர்வம் அல்ல. பொதுவாக விடுதலைப் போராட்டங்களானவை "தோன்றியது", "எழுச்சிபெற்றது", "வீழ்த்தப்பட்டது அல்லது வெற்றிபெற்றது" என அறிந்திருப்போம். ஆனால், அவ்வாறானவொன்று எம் கண் முன்னே நடந்தேறும் போது அவை சாதாரண வரலாறு என்பதில் இருந்து வேறுபட்டுச் செல்கின்றன. அவை ஓர் உணர்வு சார்ந்த ஆய்வுப்பொருளாக எம்முள்ளே மாறிப்போகின்றன.

இவ்வாறு உரையாடும்போது, சிலர் விரக்தியை வெளிப்படுத்துவர். ஒரு வயதானவருடன் கதைத்துக் கொண்டிருந்தபோது அவருக்குப் பெரும் கோபம் வந்தது. "நீங்கள் எல்லாம் வெறும் பார்வையாளர்கள். அவன் அவன் அடிச்சான் இவன் பிடிச்சான் என்று வெளியில் நின்று 'கொமன்றி' குடுத்தது மட்டும்தான் உங்களுடைய வேலை. அடிபட்டது முழுக்க உள்ளே இருந்த சனம்தான், அவர்கள் விடுதலைப் புலிகளுக்காக நின்றாலென்ன ஆமிக்காரனுக்காக நின்றாலென்ன அடியிலும் வலியிலும் வித்தியாசமில்லை" என்றார். அவரது கோபமும் விரக்தியும் நியாயமானவை.

உடல், மனவலி, அவர்களது இழப்புக்களும் அவர்களவை. ஆனால் இனம் என்பதை தாண்டி மனிதாபிமானம் என்ற வகைகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்துப் பாதிப்புக்கள் எமக்கு உண்டு. இவ்வாறான உரை



யாடல்களில் தவிர்க்கமுடியாத ஒரு சமராக ஆனந்தபுரம் சமரை எல்லோரும் கூறினார்கள்.

பலரது கூற்றில் "ஆனந்தபுரம் அடிபாடு விடுதலைப் புலிகளின் வாழ்வுக்கும் சாவுக்கும் நடந்தது. அவர்களை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள் அந்தச் சமரை



பெரும் முயற்சியுடன், பல வியூகங்களில் திட்டமிட்டு நடத்தி இருந்தனர். ஆனாலும் எதிர்பார்க்காத சுற்றிவளைப்பினாலும், சில விசுவாசமில்லாத சுயநல மக்களினாலும் இராணுவத்துக்குச் சென்ற தகவல்களால் வியூகங்களின் கட்டமைப்புகளுக்கு ஆப்பு வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைமை நம்பியிருந்த, ஆற்றலுள்ள விசுவாசமான பல பிரிகேடியர்கள், கேணல்கள் மற்றும் போராளிகள் என அனைவரும் இந்த வியூகங்களில் இணைக்கப்பட்டு கடைசியாக சந்தித்தது ஆனந்தபுரம் அடிபாடுதான்."

பலரின் அபிப்பிராயத்தில் "நாம் நம்பியிருந்தோம். ஆனால், ஆனந்தபுரம் அடிபாட்டுக்குப் பிறகு இனி சரிவராது என்று விளங்கியது, அதனால் இங்கால் வர வெளிக்கிட்டோம்" என இருந்தது.

ஆனந்தபுரம் முடிந்து, பின் முள்ளிவாய்க்காலை சந்தித்த மக்களின் மனோநிலை வேறு விதமாகவும் இருந்தது. அவர்களது அனுபவங்களில் எண்ணங்களும் கருத்துக்களும் மாறுபடும். அவை, அவர்களது தனிப்பட்ட அனுபவம், வரலாறுகள் மீதான அறிவு, தெளிவு, பகுத்தறியும் சிந்தனை என்பனவற்றில் தங்கியுள்ளது.

எவ்வாறு பார்த்தாலும் ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகள் இழந்தவை மற்றும் அதில் களம் கண்ட போராளிகளின் தியாகங்கள் அளப்பெரியன. ஆனால் காலம் எமக்குக் கொடுத்த வாய்ப்புக்கள் அனைத்திலும் ஒன்றையேனும் பயன்படுத்தியிருப்பின் ஓர் விடுதலைப் போராட்டத்தின் முடிவு இவ்வாறு அமைந்திருக்காதோ எனும் அங்கலாய்ப்பு என்னுள் இப்போதும் உண்டு.

**315. சரணடைவதற்கோ, அதில் பொது மன்னிப்பு கிடைக்கும் என்பதோ அல்லது பல தலைவர்கள் வெளியேறலாம் என்ற வாய்ப்புக்கள் இருந்தன என்பதோ விடுதலைப் புலிகளுக்கு தெரிந்திருந்ததா?**

அவர்களது தலைவர்களுக்கு அவை சென்று சேர்ந்தன்வா என்று நான் நேரடியாக அறியவில்லை. ஆனால் எங்களோடு தொடர்பிலிருந்த புலம்பெயர் அமைப்பாளர்கள், அவர்களுடன் தொடர்பிலிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பாளர்களுக்கும் தெரிந்திருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் சம்பந்தருடன் நானே பேசியிருந்தேன். ஆனால் புலம்பெயர் ஆதரவாளரும் விடுதலைப் புலிகளும் கூட ஆனந்தபுரம் சமருக்கு முன் தங்கள் பலத்தாலும் வியூகங்களாலும் இராணுவத்தை பின் தள்ளலாம் என்று நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனந்தபுரத்துக்கு பின் அரசாங்கமும் அவர்களை அழிப்பதென்ற மூர்க்கத்திலும் அல்லது சரணாகதி என்ற அடிப்படையிலும் நின்றது.

**316. மற்ற பகுதிகளிலிருந்த மக்களை பற்றியோ, எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளைப் பற்றியோ, வெளியேறிய ஆனந்தபுர மக்களுக்கு ஏதும் தெரிந்திருந்ததா?**

அவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதலின் அகோரத்தைச் சொல்லி, படைகள் தங்களது குடியிருப்புக்களுக்குள் செய்த தொடர்ந்த ஷெல் தாக்குதல்களை பார்த்தால் வேறு வழியில்லாது அவர்களும் வெளியேறுவார்கள், மற்ற விடுதலைப் புலிகள் என்ன செய்வார்களோ என்ற அனுதாபமும் அவர்கள் பாதுகாக்கப்பட





வேண்டுமான ஆதங்கமும் மேலோங்கியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது.

அதே சமயம் தாங்கள் எப்போது தங்கள் வீடுகளுக்கு செல்வோம், வாழ்வாதாரத்துக்கு என்ன வழி, காணாமல் போயிருக்கும் தங்கள் பிள்ளைகள் எங்கே என்ற அங்கலாய்ப்பு எல்லாவற்றையும் விட பூதாகாரமாக அவர்களுக்கு தெரிந்தது.

அரசாங்கத்தை விட தமிழ் மக்களின் உதவிக் கரங்கள் அவர்களுக்கு அந்த நேரத்திலும் தொடராகவும் தேவை என்பதை உணர்ந்தோம்.

(வளரும்.....)



# ஊதுவது புகை அல்ல; மரண ஓலை

முன்சி பஸ்றி

எண்ணற்ற அளவில் இவ்வுலகில் உருவெடுத்து வரும் நோய்கள் மத்தியில் நாமாகவே பலதரப்பட்ட நோய்களை உருவாக்குகின்றோம். அதில் ஒரு வகைதான் புகைப்பிடித்தல். இது எமக்கும் எம்மைச் சூழவுள்ளவர்களுக்கும் நாமாகவே அமைத்துக்கொள்ளும் மரண பாதையாகும்.

புகைப்பிடித்தல் உடல் நலத்துக்குக் கேடு என நன்கு அறிந்திருந்தும் பலர் புகைப் பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகி விடுகின்றார்கள். புகைப்பிடித்தல் உண்மையிலே உடல் நலத்துக்கு எதிர் என்பதை அவர்கள் நன்கு அறிந்துகொண்டு இருந்தாலும் அதை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

புகைப் பிடிக்காமல் இருந்தும் நோய்வாய்ப்பட்டு இறந்த பலரை அவர்கள் பொதுவாக உதாரணம் காட்டுவார்கள். புகைப் பழக்கத்துக்கு ஆதரவாக ஏதேனும் தகவல் அறிந்து, அது ஒன்றும் அவ்வளவு கெடுதல் இல்லை என்று சுயநலமாக விவாதிப்பார்கள்.

இவ்வாறு இவர்கள் பேசுவதற்குக் காரணம் இந்தப் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி கிடப்பதுதான். அவ்வாறு புகைப் பழக்கத்திற்கு அடிமையாக அதற்கும் சில காரணங்கள் உண்டு.

அதாவது, அது அந்தஸ்தைக் காட்டுவதாக/துணிச்சலைக் காட்டுவதாக ஒரு தவறான எண்ணம் பலர் மத்தியில் காணப்படுகின்றது. இது மட்டுமன்றி அதிக கவலை அல்லது மன உளைச்சல் இருக்கும்போது புகைப்பிடித்தால் அதில் உள்ள 'நிக்கோட்டின்' என்ற பொருள் மன ஆறுதலுக்கும், நாம் அதிக வேலையின் போது உடல் சோர்வு தவிர்க்க உதவுவதாகவும் இவர்கள் நினைத்துக்கொண்டு நிக்கோட்டின் எனும் விஷத்தை அருந்துகின்றார்கள்.

மேலும் புகைப்பிடிக்கும் நண்பர்களைத் திருத்த முயற்சி செய்யும் சிலர், தாமும் அந்த வலையில் விழுந்து விடுகின்றனர். புகைத்தலுக்கு அடிமையாகி இவர்கள் புகைப் பிடிப்பதன் மூலம் எதையோ சாதித்த திருப்தி சிலருக்கு கிடைக்கின்றது. இன்னும் சிலர் புகை வளையங்கள் காற்றில் கரைவது போல் தமது கவலைகளும் கரைந்து விடுவதாக உணர்வதால் தாம் புகைப் பிடிப்பதாகக் கூறுகின்றார்கள்.

இவை அனைத்தும் வெறும் கற்பனைகளே தவிர வேறொன்றுமில்லை. புகைப்பிடிக்காதவர்கள் இவர்கள் கூறும் காரணங்களை அசட்டுத்தனமானவை என்பதை நன்கு அறிவர். ஒரு சிகரெட் பிடிக்க 5 நிமிடங்கள்



எனின் சாதாரணமாக ஒரு நாளைக்குப் பத்து சிகரெட் பிடிப்பவர்கள் குறைந்தது ஒரு மணி நேரத்தை வீணடிக்கின்றார்கள். கால இழப்பு என்பது மற்றெல்லா இழப்பிலும் பார்க்க பெரியதும் கொடியதும் ஆகும்.

மேலும் ஒரு முக்கியமான கேடு புகைப்பிடிப்பதால் விளைகின்றது. புகைப்பிடிப்பவர்கள் நேர்முக புகைப்பாளர் என்கின்றோம். இவர்கள் புகைப் பிடிக்கும் போது பக்கத்தில் இருப்பவர்களும் அதை சுவாசிக்க நேரிடும். இத்தகையவர்களை மறைமுக புகைப்பாளர் என்கின்றோம்.

புகைப்பிடிப்பதால் நேர்முக புகைப்பாளர்களுக்கு எந்தளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றதோ அதே பாதிப்புகள் அதேயளவில் மறைமுக புகைப்பாளர்களுக்கும் ஏற்படும்.

சாதாரணமாக உலகம் முழுவதும் 110 கோடி பேர் புகைப் பிடிக்கின்றார்கள். இதில் 50 வீதமானோர் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு உயிரிழக்கின்றனர். ஒவ்வொரு வருடமும் உலகில் 70 லட்சம் மக்கள் புகைப் பிடிப்பதால் மட்டுமே உயிரிழக்கின்றனர். இதில் ஏறத்தாழ 9 லட்சம் பேர் புகைப்பவர்களின் அருகில் இருந்ததால் பாதிக்கப்பட்டவர்கள். சாதாரணமாக 50 லட்சம் ஆண்களும், 20 லட்சம் பெண்களும் ஒவ்வொரு வருடமும் புகைப்பிடிப்பதற்கு அடிமையாகி உயிரிழக்கின்றனர்.

நாம் அறிவதில்லை, புகைக்கப் புகைக்கத்தான் நல்வாழ்வு எம்மைப் பகைக்கின்றது. புகையை உள்ளே இழுக்க இழுக்க இறப்பு சீக்கிரம் எம்மை அழைக்கின்றது.

புத்துணர்வுக்குப் புகைத்தோம் ஆனால் புற்று நோய்தான் இறுதியில் வந்தது. மன நிம்மதிக்குப் புகைத்தோம் ஆனால் இறுதியில் மாரடைப்புத்தான் வந்தது.



> “புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளோரைக் கொரோனா வைரஸ் எளிதாக தாக்கும் என்பதுடன், அவர்களின் நுரையீரல் ஏற்கனவே சேதமடைந்த நிலையில் இருக்கும் என்பதால், கொரோனா தாக்கினால் விரைவாக உயிரிழப்பு ஏற்படும் என்றும், அதனால் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிடுவதற்கு இதுதான் மிகவும் சரியான நேரம் என்றும் பொதுமக்களை உலக சுகாதார நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.”



அதுமட்டுமன்றி, புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளோரைக் கொரோனா வைரஸ் எளிதாக தாக்கும் என்பதுடன், அவர்களின் நுரையீரல் ஏற்கனவே சேதமடைந்த நிலையில் இருக்கும் என்பதால், கொரோனா தாக்கினால் விரைவாக உயிரிழப்பு ஏற்படும் என்றும், அதனால் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கைவிடுவதற்கு இதுதான் மிகவும் சரியான நேரம் என்றும் பொதுமக்களை உலக சுகாதார நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

எனவே, புகைத்தலுக்கு அடிமையாகிய எம்மையும் எமது சமூகத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். புகைத்தல் எத்தகைய கொடியது என்று விழிப்புணர்வு அனைவருக்கும் கிடைக்க வேண்டும். புகைப்பழக்கத்திலிருந்து எம்மை நாம் மாற்றிக்கொள்ளாமல் இருந்தால் காலப்போக்கில் கருகிய உடல்கள் மாத்திரமே எஞ்சி இருக்கும். ஆகவே, எம்மையும் எம்மைச் சூழவுள்ளோரையும் பாதுகாப்போம்.



## VIRTUAL INTERVIEW [VIA ZOOM]

## Global NIHR - AF Project, Faculty of Medicine, University of Jaffna.

**Post of Coordinator for Data Collection & Data quality, Data Collector, Phlebotomist, Medical Laboratory Technician and Computer operator (Full Time, on Contract Basis)**

University of Jaffna, Sri Lanka has embarked on a medical research programme on Global Health Research under Atrial Fibrillation Management Project in partnership with University of Birmingham, UK Funded by National Institute of Health Research (NIHR), UK.

**01.Coordinator – Data Collection & Data quality**
**Vacant – 01 post**

**Requirements:**
- MBBS or Bachelor degree in indigenous medicine (BSMS, BAMS, and BUMS) or Bachelor degree in Allied Health Sciences or other equivalent qualification from UGC approved University / HEI. (Those who are waiting for the final results also can apply).
- At least 1 year working experience in health-related research data collection & data quality.
- Preference will be given to those who have experience in data analytical skill with the ability to collect, organize, analyze and disseminate significant amounts of information with attention to detail and accuracy, knowledge of statistics and experience using statistical packages for analyzing datasets.

**Remuneration:** A monthly salary of LKR 45,000.00 will be paid.

**02.Data Collector**
**Vacant – 20 posts**

**Requirements:**
- MBBS or Bachelor degree in indigenous medicine (BSMS, BAMS, and BUMS) or Bachelor degree in Allied Health Sciences or other equivalent qualification from UGC approved University/ HEI. Those who are waiting for the final results also can apply.
- Proven working experience in health research related data collection and clinical medicine.
- Ability to handle e-based data collections.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**03. Phlebotomist**
**Vacant – 2 posts**

**Requirements:**
- Experience in blood withdrawing especially using vacutainer technique.
- Preference will be given to those who have experience in using computers for variety of t asks, labeling of samples, waste disposal using standard professional competencies and both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 30,000.00 will be paid.

**04. Medical Laboratory Technician**
**Vacant – 2 posts**

**Requirements:**
- Work experience in maintain good laboratory practice, centrifuging, preparation, pipetting, labeling and storing of bio samples using standard professional competencies.
- Preference will be given to those who are having experience in using computers for variety of tasks and both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 40,000.00 will be paid.

**05. Computer operator**
**Vacant – 2 posts**

**Requirements:**
- A Bachelor degree from UGC approved University / HEI.
- Preference will be given to those who are having experience in handling the electronic medical record and using computers for variety of tasks in both health & research filed.

**Remuneration:** A monthly salary of LKR 35,000.00 will be paid.

Applicants are requested to send the prescribed application form downloaded from the University website along with copies of the Education Certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach the **Country Lead, Global NIHR – AF Project, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna.** In order to avoid any delay, applicants are expected to submit their application forms with the scanned copies of all the relevant documents (mentioned above) through the E-mail (afsl@univ.jfn.ac.lk) on or before 08.09.2021.

**General note to all the above posts**
- All selected candidates will be appointed as full time on contract basis for six months.
- Should be a citizen of Sri Lanka.
- Ability to work in the field of any part of Northern Province, Sri Lanka.
- Age should be above 21 years.
- All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF): the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer 12% & 3% of the monthly salary to EPF & ETF, respectively.
- The candidates who apply for **more than one** post should submit **separate application for each of the posts**
- Incomplete and Illegible applications and applications received after the closing date will be rejected without intimation.
- **Only short- listed applicants** will be called for interview **via zoom** (due to the COVID 19 pandemic situation). Zoom Link will be sent to the shortlisted applicants via email.

For further details please refer the University of Jaffna website - www.jfn.ac.lk

**Registrar**
**University of Jaffna**


# பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் இன்று முதல் அதிகரிப்பு

## பாணின் விலை 5 ரூபாவால் உயர்வு



நாட்டில் நேற்று முதல் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பணிஸின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒரு கிலோகிராம் கேக்கின் விலை 100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்பானது நேற்று முதல் அமுலுக்கு வருகின்றது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயரட்ன அறிவித்துள்ளார்.

# மூன்று வாரங்களாவது முழு முடக்கம் வேண்டும்

## விசேட வைத்திய நிபுணர்கள் இடித்துரைப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அதிதீவிரமடைந்துள்ள நிலையில் முடக்கம் குறித்த தீர்மானத்தை அரசு உட னடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். குறைந்தது மூன்று வாரங்களாவது நாடு முடக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தொற்று நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

60 வயதுக்கு மேற்பட்டோரில் முழுமையாகத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களையும், ஒரு தடுப்பூசியைக் கூட பெறாதோரையும் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் ஒரு தடுப்பூசியையேனும் பெறாத 60 வயதுக்கு மேற்பட்டோர் ஏனையோரை விட தொற்றுக்குள்ளாகும் வீதம் 9 மடங்கு அதிகமாகும் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்டோர் தாமதிக்காமல் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எவ்வாறிருப்பினும் தடுப்பூசியைப் பெறுவது மாத்திரமே இதற்கான தீர்வு அல்ல. நாட்டில் கொரோனாத் தொற்று அதிதீவிரமடைந்துள்ள நிலையில் முடக்கம் குறித்த தீர்மானத்தை அரசு உடனடியாக மீள்பரிசீலனை செய்ய வேண்டும். குறைந்தது மூன்று வாரங்களாவது நாடு முடக்கப்பட வேண்டும்.

அதன் ஊடாக 10 நாள்களின் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை, மரணங்களின் எண்ணிக்கை மற்றும் தொற்றுப் பரவும் வீதம் என்பவற்றைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

## 94, 475 குடும்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயிரத்து 627 குடும்பங்களுக்கு அனுமதிக்கப்பட்டபோதும் இரண்டாவது தடவை 2 இலட்சத்து 36 ஆயிரத்து 113 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவு தற்போது 2 ஆயிரமாகக் குறைக்கப்பட்டபோது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 56 ஆயிரத்து 372 பேர் தகுதி பெற்றுள்ள நிலையில் 36 ஆயிரம் பேருக்கான 72 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது. இதில் 5 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கான நிதிகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதோடு ஏனைய 10 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் பகுதியளவு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 680 குடும்பங்கள் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையனவாகக் கண்டுகொள்ளப்பட்டுள்ளன. இதற்காக 17.36 மில்லியன் ரூபா தேவை. தற்போது 2 மில்லியன் ரூபா மாவட்ட செயலகத்துக்குக் கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரம் ரூபா பெறத் தகுதியுடையோர் 8 ஆயிரத்து 553 குடும்பங்கள். இதற்காக தற்போது 5 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.

வவுனியா மாவட்டம் மாவட்டத்திலே 17 ஆயிரத்து 270 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போது 16 மில்லியன் ரூபா மாவட்டத்துக்குக் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 3 ஆயிரத்து 600 குடும்பங்கள் தகுதியடைந்த நிலையில் 5 லட்சம் ரூபா கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கோரிக்கை



கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி மக்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அரசாங்க அதிபர் க.மகேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

யாழில் புதிதாக 148 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய மாவட்டத்தில் தொற்றாளர்கள் எண்ணிக்கை 10 ஆயிரத்து 166 ஆக அதிகரித்துள்ளமையுடன் கொரோனா மரணங்கள் 200 ஆக உயர்ந்திருக்கின்றன.

குறித்த அதிகரிப்பின் பெரும் பகுதி மே மாதத்தின் பிற்பகுதியில் நடந்ததாகும். அத்துடன் தற்போது தினசரி தொற்றாளர்கள் எண்ணிக்கை சராசரியாக 130 வரை காணப்படுகின்றது. இது மோசமான அதிகரிப்பாகும்.

ஆகவே மாவட்டத்திலுள்ள மக்கள், தங்களை முடக்கிக் கொண்டு அரசு அறிவித்துள்ள 10 நாள்களில் வீடுகளில் இருப்பது, எமது மாவட்டத்தையும் நாட்டையும் மோசமான நிலையிலிருந்து மீட்பதற்கு உதவியாக இருக்கும்.

எனவே மக்கள் இந்த விடயத்தில் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டெல்டா மாறுபாட்டுக்கு எதிராக பயனுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள சீனத் தடுப்பூசிகள்

## அந்நாட்டு தூதரகம் தகவல்

'கொவிட்' இன் டெல்டா மாறுபாட்டுக்கு எதிராக சீனத் தடுப்பூசிகள் பயனுள்ளவையாக இருக்கின்றமையை அடையாளம் கண்டுள்ளதாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் முன்னணி, தொற்றுநோயியல் நிபுணர் சோங் நோன்ஷான் தலைமையிலான ஆராய்ச்சி குழு இதனைக் கண்டறிந்துள்ளதாக கொழும்பின் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம், டெல்டா வகையை மிகவும் பரவும் தன்மை கொண்டதாகக் கண்டறிந்து, அதனை தீவிரமான மாறுபாடாக வகைப்படுத்தியுள்ளது.

இது இப்போது உலகில் ஆதிக்கம் செலுத்தும் மாறுபாடாக மாறியுள்ளது, இது அதிக இறப்புகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

தெற்கு சீனாவின் குவாங்சோவில், கொவிட் தொற்றுப் பரவிய பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி சீனத் தடுப்பூசிகளின் இரண்டு அளவுகள் அறிகுறிகளைத் தடுப்பதில் 59.0 சதவீதமும், மிதமான அறிகுறிகளைத் தடுப்பதில் 70.2 சதவீதமும் மற்றும் கடுமையான அறிகுறிகளைத் தடுப்பதில் 100 சதவீதமும் பயனுள்ளவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள், 2021 ஓகஸ்ட் 14 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்டதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# ஒரேநாளில் 10 பேர் மட்டக்களப்பில் சாவு

## கொரோனாவின் கோரத்தாண்டவத்தால்

மட்டக்களப்பில் கடந்த 24 மணித்தியாலத்தில் ஒரு வைத்தியசாலை சிற்றூழியர் ஒருவர் உட்பட 10 பேர் கொரோனாவினால் உயிரிழந்துள்ளமையுடன் 250 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி கண்டறியப்பட்டதையடுத்து மாவட்டத்தில் இதுரை உயிரிழந்தோர் 182 ஆக அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், ஓட்டுமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேரும், செங்கலடி, ஏறாவூர், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் உட்பட 3 பேரும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேர் உட்பட 10 பேர் கடந்த 24 மணித்தியாலத்தில் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 53 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 52 பேருக்கும், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 11 பேருக்கும், ஓட்டுமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 27 பேருக்கும், ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 பேருக்கும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 பேருக்கும், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேர் உட்பட 250 பேருக்கு கொரோனாத் தொற்றுறுதி கண்டறியப்பட்டுள்ளது.

எனவே நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர் வீதம் அதிகரித்துச் செல்வதுடன் ஒரேநாளில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். ஆகவே, மக்கள் வீட்டை விட்டு வெளியேவரவேண்டாம் தொடர்ந்து சுகாதார வழிமுறைகளைப் பேணி நடப்பதன் மூலம் கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என அவர் தெரிவித்தார்.




வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. கந்தபுராணத்தை அருளியவர் யார்?**

..............................................................................

**2. சூரபத்மனின் மகனது பெயர் என்ன?**

..............................................................................

**3. கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற குமராலயம் ஒன்று தருக?**

..............................................................................

**4. திருக்கேதீஸ்வர நாதனின் தேவியின் பெயர் என்ன?**

..............................................................................

**5. நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்த்தக் கேணி எப்போது அமைக்கப்பட்டது?**

..............................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

12

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..............................................
கையொப்பம்

# தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலக புதிய இணையத்தளம் அங்குரார்ப்பணம்

மக்களிடையே ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் புதிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் அலி சப்றியினால் நீதி அமைச்சில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது நீதி அமைச்சர் அலி சப்றி குறிப்பிடுகையில் -

நாட்டின் அனைத்து சமூகங்களுக்கிடையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை மேலும் மேம்படுத்துவது தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு அறிவிக்க இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய ஒற்றுமையின் முக்கியத்துவமும் அதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் அது தேசியப் பாதுகாப்பிற்கு பங்களிக்கும் ஒரு காரணியாகும் என்பதைப் புரிந்துகொண்டிருக்கும் இந்த அரசாங்கம், இந்த காரியாலயம் ஊடாக நாட்டு மக்களுக்கிடையில் ஐக்கியத்தை விரிவாக்கச்செய்ய கிடைக்கும் பங்களிப்பு தொடர்பாக நாங்கள் ஆரோக்கியமான எதிர்பார்ப்பை வைத்திருக்கின்றோம்.

இலங்கைக்குள் பல்வேறு சமூகங்கள் புரிந்துணர்வுடன் ஒற்றுமையாகவும் ஐக்கியமாகவும் பல்வேறு மதங்களைப் பின்பற்றிக்கொண்டு சிநேகபூர்வமாக இலங்கை பிரஜைகளாக வாழ்வதுடன் அந்த நிலைமையை மேலும் விரிவாக்குதல் மற்றும் தொடர்ந்து கொண்டுசெல்லுதல் தொடர்பான தகவல்களை மக்களுக்கு மத்தியில் கொண்டுசெல்லுதல் தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் புதிய இணையத்தளத்தை மக்கள் மயமாக்குவதன் மூலம் எதிர்ப்பாக்கின்றோம். -என்றார்.



இந்த நிகழ்வில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி குஷான் தஅல்விஸ், அதன் பணிப்பாளர் சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜனக்க ரணதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இந்திய உயர் ஸ்தானிகர் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்பாக்லே புதிதாக நியமிக்கப்பட்ட வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை நேற்று (திங்கட்கிழமை) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.


இந்தச் சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கொவிட் -19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவி மற்றும் ஒத்துழைப்புகளுக்காக பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்திய கடற்படைக் கப்பல்களைப் பயன்படுத்தி இந்திய கிழக்கு துறைமுகங்களிலிருந்து ஒட்சிசன்களை இலங்கைக்கு விநியோகித்தமைக்காகவும் அமைச்சர், உயர்ஸ்தானிகரிடம் நன்றிகளை தெரிவித்தார்.

இலங்கையில் பௌத்த கலாசாரத் தலங்களைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் இந்திய அரசாங்கம் 1.5 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கியதை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.

இந்திய-இலங்கை கூட்டு ஆணைய மாநாட்டைக் கூட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.

# பாரிய பாறைக் கற்குழிக்குள் வீழ்ந்த யானைக் குட்டி பாதுகாப்பாக மீட்பு!



புத்தளம் கருவலகஸ்வவ, எரம்புதுகஸ்வெள பகுதியில் உள்ள பாரிய பாறைக் கற்குழியொன்றுக்குள் வீழ்ந்த யானைக் குட்டி ஒன்றை பாதுகாப்பாக மீட்டுள்ளோம் என கருவலகஸ்வெள வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த யானைக் குட்டி பிறந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ளதாகவும், அந்த யானைக் குட்டி குழிக்குள் வீழ்ந்து மூன்று நாள்களாக வெளியே வராமல் உள்ளேயே கிடந்ததாகவும் கருவலகஸவெள வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

தப்போவ சரணாலயத்துக்கு அருகிலுள்ள எரம்புதுகஸ்வெள பகுதியில் உள்ள பாரிய பாறை கற்குழி ஒன்றுக்குள் சிறிய யானைக்குட்டி ஒன்று வீழ்ந்து கிடப்பதாக, அப்பகுதியில் கால்நடைகளை மேய்க்கச் சென்ற நபர் ஒருவர் கருவலகஸ்வெள வனவிலங்கு அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

தகவலை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கருவலகஸவெள வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் பாரிய குழிக்குள் வீழ்ந்த யானைக் குட்டியை பாதுகாப்பாக மீட்டு, கருவலகஸ்வெள வனவிலங்கு அலுவலகத்துக்குக் கொண்டு வந்தனர்.

இவ்வாறு பாதுகாப்பாக மீட்கப்பட்ட யானைக் குட்டியை பரிசோதனை மற்றும் சிகிச்சை என்பவற்றுக்காக அநுராதபுரம் பன்டுலகம வனவிலங்கு அலுவலகத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாக கருவலகஸ்வெள வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# ராஜபக்ஷக்களை நம்பி நாம் ஏமார்ந்துவிட்டோம்!

## தேரர் சீற்றம்

69 லட்சம் மக்கள் வாக்களித்து 3 இல் 2 பலத்தை கொடுத்தது இதற்காகவா என கோட்டாபய ராஜபக்ஷவிடம் தென்னிலங்கை தேரரொருவர் கடும் சீற்றத்துடன் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள காணொலியில் -

போலியான கண்காட்சிகளை நடத்தி மக்களை ஏமாற்றிய ராஜபக்ஷர்களிடம் நாமும் ஏமாற்றமடைந்து விட்டோம். கோட்டாபய ராஜபக்ஷவிற்கே நானும் வாக்களித்தேன்.

அது தொடர்பில் இன்று நான் 1,000 முறை கவலை அடைகிறேன். இந்த நாட்டில் ஒவ்வொரு அடியும் நொருங்கி போயுள்ளது. கொவிட்டை வைத்து உழைக்கின்றார்கள்.

நாட்டில் பணம் இல்லை என மக்களுக்குக் கூறி, 36 கோடி செலவழித்து வாகனங்களை இறக்குமதி செய்கின்றார் பஸில். 100 நகரங்களை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்துள்ளார்கள்.

புதிய பாதைகளை அமைக்க ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் மக்களுக்கு சொல்கிறார்கள் பணம் இல்லை என்று.

மக்களுக்கு சொல்கின்றேன், இவர்களுக்கு இனி வாக்குகளை வழங்க வேண்டாம். இவர்களை வீட்டுக்கு அனுப்ப நேரம் சரி என சுட்டிக் காட்டியுள்ளார்.

# பங்காளிக் கட்சியினர் அரசுக்கெதிராக செயற்படுகின்றமை கவலைக்குரியதே!

## காமினி லொகுகே தெரிவிப்பு



அரசாங்கத்தை பலவீனப்படுத்த சர்வதேச அமைப்புக்கள் தேசிய மட்டத்தில் உள்ள தொழிற்சங்கத்தினருக்கும், பிற தரப்பினருக்கும் நிதியுதவி வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது.

அரசாங்கத்தில் உள்ள பங்காளிக் கட்சிகள் சர்வதேச அமைப்புக்களால் ஈர்க்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பங்காளிக் கட்சியினர் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுகின்றமை கவலைக்குரியது என மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றம் 502 பேர் 24 மணிநேரத்தில் கைது!

*நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய 502 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 56 ஆயிரத்து 796 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.*

*இதேவேளை, மேல்மாகாண எல்லைப் பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 13 சோதனைச் சாவடிகளில் 757 வாகனங்களும், 1,509 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.*

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.08.2021 இல் வெளியிடப்பெற்றது.